**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி.**

**முன்னிலை:– திருமதி R.D. குருலட்சுமி,** M.A.,M.L., PGDI & CL.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்தணி.

திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் புரட்டாசித் திங்கள் 14–ம் நாள்
2024 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் திங்கட் கிழமை

இடைநிலை மனு எண்.2/2022
இன்
அசல் வழக்கு எண்.33/2019
(CNR.No.TNTR21-000051-2019)

...

1. செங்கல்வராயன் (இறந்துவிட்டார்)
2. R. லிசி
3. T. ராமநாதன் ... 1 முதல் 3 மனுதாரர்கள்/ 1 முதல் 3 பிரதிவாதிகள்

/எதிர்/

1. முனிரத்தினம்
2. ஆனந்தன் ... எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்

இம்மனு கடந்த 18.09.2024 ஆம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது 1வது மனுதாரர் இறந்துவிட்ட நிலையில், 2,3 மனுதாரர்கள்/2,3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் V. நித்தியானந்தம், D. சேகர், M. தனராஜன், ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் V. கிஷோர் ரெட்டி, E. விஜயகுமார், A.அகிலா ஆகியோர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், இரு தரப்பு வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை நிலுவையில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கை நிராகரித்து உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 11 (a)–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:–**

(அ) பொய்யான தவகல்களைக் கொடுத்து வாதிகள் பரிகாரங்கள் கோரியுள்ளனர். அசல் வழக்கு சட்டப்படியும் பொருண்மைபடியும் நிலைநிற்கத்தக்கதல்ல. அது நிராகரிக்கத்தக்கது. சுத்தமான கரங்களுடன் வாதிகள் இந்நீதிமன்றத்தை அணுகவில்லை. 'A' அட்டவணைச் சொத்து பூர்வீகம் என்ற நிலையில் எதிர்மனுதாரர்கள் எந்த உரிமையும் இல்லாமல் சொத்தின் உரிமை கோர இயலாது. சொத்துக்கள் உண்மையில் 1ம் பிரதிவாதியின் தகப்பனாரான நாராயணசாமி நாயுடுவுக்கு பாத்தியம். நாராயணசாமி நாயுடு அவரது வாழ்நாள் முழுவதும் பாத்தியத்தில் வைத்திருந்து அதன்பின் 1ம்

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.09.30 15:01:02 +0530

பிரதிவாதியின் தகப்பனாரான கண்ணம்ம நாயுடு வைத்திருந்து அவர் அனுபவித்து வந்து அதன்பின்னிட்டு 1ம் பிரதிவாதியின் தகப்பனார் 1994ல் இறந்த பின்னிட்டு 'A' அட்டவணைச் சொத்து மனுதாரருக்கு கிடைத்து, மனுதாரர் அனுபவத்தில் இருந்து வருகிறார்.

(ஆ) 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் உள்ள மேற்படி ஆவணங்களை பார்வையிட்டாலே முழுமையான முடிவுக்கு நீதிமன்றம் வர முடியும். எதிர்மனுதாரர்கள் அலைக்கழிவாக வழக்கை தாக்கல் செய்துள்ளனர். எனவே இந்நீதிமன்றம் அசல் வழக்கை அனுமதிக்க கூடாது எதிர்மனுதாரர்கள் தன் கட்சிக்கு ஆதரவாக ஆதாரங்கள் தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர்கள் 'A' அட்டவணைச் சொத்திற்கு எவ்வகையிலும் தொடர்புடையவர்கள் இல்லை. 1ம் பிரதிவாதியின் தகப்பனார் கண்ணம்ம நாயுடு, வெங்கடசாமி நாயுடு என்பவரிடமிருந்து 17.07.1962ம் தேதியிட்டு ஆவண எண்.1869/1962ன்படி கிரையம் பெற்று முழு சுவாதீனத்தை அடைந்து 'A' அட்டவணைச் சொத்தை அனுபவித்து வந்துள்ளார்.

(இ) நாராயணசாமி, துரைசாமி ஆகியோர்கள் சகோதரர்கள் இல்லை. 'A' அட்டவணைச் சொத்தில் தன் பாத்தியத்தை நிரூபிக்க எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யாததால் வழக்கு நிராகரிக்கத்தக்கது. எனவே இவ்வழக்கை விசாரிக்க தேவையில்லை. சொத்தை அபகரிக்கவே வாதிகள் இந்நீதிமன்றத்தை அணுகியுள்ளனர். 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தின் உண்மையான உரிமையாளராக இருந்து அவரது மருத்துவ செலவிற்காக வழக்குச் சொத்தை இந்த எதிர்மனுதாரரிடம் விற்று உள்ளனர். எனவே கிரைய ஆவணம் செல்லாது என பரிகாரம் கோர இயலாது. கிரையத்திற்குப் பின் இந்த எதிர்மனுதாரர் முழு உரிமை அடைந்து அனுபவித்து வருகிறார்.

(ஈ) எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தை தவறாக நடத்தி விளம்புகை பரிகாரம் கோர இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். எனவே அசல் வழக்கானது காலவரையறை மற்றும் வியாஜ்ஜியமூலத்தால் பாதிக்கப்பட்டது என்பதால் நிராக்கரித்து உத்தரவிட கோரி மனுதாரரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மறுப்புரையின் சுருக்கம்:-</u>

(அ) உரிய காலத்தில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய மனுதாரர்கள் தயாராக இல்லை. எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதால் இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது ஆகும். வழக்கை நிராகரிக்க உரிமையில் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 11ன் கீழ் மனு தாக்கல் செய்ய முடியும் என்பதால் உரிமையில் நடைமுறைச் சட்டம் பிரிவு 11ன் கீழ் இவ்வழக்கு தடை செய்யப்படவில்லை. பத்தி 2,3ல் மனுதாரர்கள் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் சுத்த பொய். 'A' அட்டவணைச் சொத்து 1ம் மனுதாரரின் தாத்தாவுக்கு பாத்தியமாக இருந்து அவர் அனுபிவித்து வந்து அவர் இறந்த பின்னிட்டு அவரது மகனான கண்ணம்ம நாயுடு அனுபவித்து வந்து அவர் இறந்த பின்னிட்டு 1ம் மனுதாரர் அனுபவித்து வந்ததாக கூறுவது பொய்.

R D GURULAKSHMI

Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.09.30 15:01:32 +0530

எதிர்மனுதாரர்கள் வழக்கு சொத்தை அனுபவித்ததை நிரூபிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல்செய்யவில்லை என்பது பொய்.

(ஆ) நாராயணசாமி நாயுடுவின் 2 வது மகனாக வெங்கடசாமி நாயுடு 'A' அட்டவணைச் சொத்தில் அவரது பிரிவினையில்லாத பாகத்தையும் இதர சொத்துக்களையும் நாராயணசாமி நாயுடுவின் மூத்த மகனாக கண்ணம்ம நாயுடுக்கு 17.07.1962 ம் தேதியிட்டு எழுதிக் கொடுத்ததாக கூறுவது உண்மை. கண்ணம்ம நாயுடு அதுமுதல் 'A' அட்டவணைச் சொத்தின் முழுமையான பாத்தியஸ்தராக இருந்ததாகவும் எதிர்மனுதாரர்களுக்கு எந்த பாத்தியமும் இல்லை என்று கூறுவது பொய். பிராமாணப் பத்திரத்தின் பாரா 6 ல் கூறியுள்ளவை பாதி உண்மை. துரைசாமி நாயுடு வாதியின் தகப்பனார் என்பது உண்மை. வழக்கு 'A' அட்டவணைச் சொத்தில் துரைசாமி நாயுடு எந்த பாத்தியத்திலும் அனுபவத்திலும் இல்லை என்பது மறுக்கப்படுகிறது.

(இ) பிராமாணப் பத்திரத்தின் பாரா 7 ல் கூறியுள்ளவை பாதி உண்மை பாதி பொய். 1, 2 எதிர்மனுதாரர்கள் 1 ம் மனுதாராரின் உறவினர்கள். வழக்கு 'A' அட்டவணைச் சொத்திற்கு பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் எதிர்மனுதாரர்கள் பாத்தியத்தை காட்டவில்லை என்று கூறியிருப்பது பொய். 1,2 எதிர்மனுதாரர்கள் கெட்ட எண்ணத்துடன் சொத்தை அபகரிக்க இந்நீதிமன்றத்தை அணுகி இருப்பதாக கூறியிருப்பது பொய். வழக்கு சொத்தை 15.02.2019 ம் தேதியிட்டு 1 ம் மனுதாரர், 2 ம் மனுதாரருக்கு எழுதி வைத்த ஆவணம் பெயரளவிலான ஆவணம்.

(ஈ) மனுதாரர்கள் காலவரையறையாலும், வியாஜ்ஜியமூலத்தாலும் பாதிக்கப்பட்டுள்ள இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் கூறுவது மறுக்கப்படுகிறது. வழக்கின் வியாஜ்ஜியமூலம் 15.02.2019 ம் தேதி 1 ம் மனுதாரர் 2 ம் மனுதாரருக்கு ஆவணம் எழுதிக் கொடுத்ததிலிருந்து ஆரம்பிப்பதால் மேற்படி ஆவணத்தை ரத்து செய்ய கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த எதிர்மனுதாரர்கள் 15.02.2019 ம் தேதியிட்ட கிரைய ஆவணம் செல்லாது எனவும் வேறு பரிகாரத்திற்காகவும் தாக்கல் செய்துள்ளனர்.

(உ) பிராதைப் படித்தாலே சரியான நியாயமான கேள்விகளும், உரிய காலத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதும் தெரிய வரும். எனவே இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல. என்னென்ன காரணத்திற்காக வழக்கு நிராகரிக்க வேண்டும் என்ற காரணம் குறிப்பாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை. இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யத்தக்கது. இம்மனுவில் எந்த நல்லெண்ணமும் இல்லை. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. <u>தீர்வுக்குரிய பிரச்சனை:—</u>

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

4. <u>தீர்வு:—</u>

இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.09.30 15:01:58 +0530

செய்யப்பட்டது. அசல் வழக்கு உரிய வியாஜ்ஜியமூலமின்றி காலவரையறை கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 11ன் கீழ் தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் எனவே இம்மனுவை அனுமதித்து அசல் வழக்கை நிராகரிக்க கோரி மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. கற்றறிந்த எதிர்மனுதாரர்கள் தரப்பில் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரைய ஆவணம் எழுதி வைத்த 15.02.2019ம் தேதியிலிருந்து அசல் வழக்கு உரிய கால அவகாசத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே இவ்வழக்கு கால அவகாசம் மற்றும் உரிய வியாஜ்ஜியமூலத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் பிராதை நிராகரிக்க இயலாது என்றும் மனுவை தள்ளுபடி செய்ய கோரி வாதிடப்பட்டது.

5. காலவரையறை என்பது சங்கதிகள் மற்றும் சட்டத்துடன் இணைந்து வருவது என்பதால் அசல் வழக்கின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் அடிப்படையில் முழுமையான விசாரணைக்கு பின்பே இவ்வழக்கு உரிய காலவரையறைக்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதைப் பொறுத்து தீர்மானிக்க முடியும் என்ற நிலையில் இவ்வழக்கின் சூழ்நிலைகளில் இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

இறுதியாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. அவரவர் செலவுத் தொகையை அவரவரே ஏற்றுக் கொள்ள வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

R D GURULAKSHMI

Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.09.30 15:02:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

R D GURULAKSHMI

Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.09.30 15:02:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.